முக்கிய வார்த்தைகள்:
பண்புகள்
இதயம்
திருக்குர்ஆன் / அல்லாஹ்வின் வார்த்தை

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**30 அக்டோபர் 2026 / 19 ஜமாதில் அவ்வல் ஹிஜிரி 1448**

# திருக்குர்ஆன் இதயத்தை ஒளிரச் செய்கிறது, குணத்தை அழகுபடுத்துகிறது

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي هَدَانَا لِهَٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ لَوْلَا أَنْ هَدَانَا ٱللَّهُ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ. قَالَ تَعَالَى فِي ٱلتَّنْزِيلِ: يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ ٱتَّقُوا۟ ٱللَّهَ حَقَّ تُقَاتِهِۦ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنتُم مُّسْلِمُونَ.

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]** அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் கட்டளைகள் அனைத்தையும் நிறைவேற்றுவதன் மூலமும், அல்லாஹ்வினால் விலக்கப்பட்டவை அனைத்தையும் தவிர்ப்பதன் மூலமும், அல்லாஹ்வின் மீது ”தக்வா” [பக்தியை] ஏற்படுத்திக் கொள்வோமாக! இன்று, நாம் நம்மிடம் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் தக்வா, மறுமையில் நமக்கு மகிழ்ச்சியின் ஊற்றாக அமையட்டுமாக! ஆமீன், யாரப்பல் ஆலமீன்.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, **திருக்குர்ஆனை**, அதாவது **கலாமுல்லாஹ்வை** (அல்லாஹ்வின் வார்த்தையை), நூர் (ஒளி), ஹுதா

(வழிகாட்டுதல்), ஸிஃபா (குணமளித்தல்) மற்றும் தஸ்கிரா (நினைவூட்டல்) போன்ற சிறப்பானப் **பண்புகளால்** வர்ணிக்கின்றான்.

இந்தப் **பண்புகள்**, **திருக்குர்ஆனுடனான** நமது உறவை மதிப்பிட நம்மைத் தூண்டுகின்றன. திருக்குர்ஆன் உண்மையிலேயே நமது வாழ்வின் ஒளியாகவும், வாழ்க்கைத் தீர்மானங்களை நாம் எடுக்கும்போது நமது வழிகாட்டியாகவும், நமது ஆன்மாவுக்கும் இதயங்களுக்கும் குணமளிப்பதாகவும், நமது குணத்தை வடிவமைக்கும் நினைவூட்டலாகவும் இருக்கின்றதா? அல்லது நாம் இன்னும் வெறும் வாய்மொழி ஓதுதலிலேயே சிக்கிக் கொண்டிருக்கிறோமா? அதாவது, வெறும் நாவால் மட்டும் ஓதிக் கொண்டு இருக்கின்றோமா? என நாம் சிந்திக்க வேண்டும்.

அல்லாஹ் சுப்ஹானஹூ வதஆலா, திருக்குர்ஆனின் "முஹம்மது" எனும் அத்தியாயத்தின் 24-வது வசனத்தில் கூறுகிறான்:

أَفَلَا يَتَدَبَّرُونَ ٱلْقُرْءَانَ أَمْ عَلَىٰ قُلُوبٍ أَقْفَالُهَآ ﴿٢٤﴾

பொருள்: மேலும் அவர்கள் இந்தக் **குர்ஆனை** ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? அல்லது அவர்களின் **இருதயங்கள்** மீது பூட்டுப் போடப்பட்டு விட்டனவா?

சில சமயங்களில், நமது பலவீனங்களும் குறைகளும் **திருக்குர்ஆனின்** போதனைகளை நம்மால் இயன்ற வரை உள்வாங்கி, அதன்படி நடப்பதைத் தடுக்கின்றன. எனவே, **திருக்குர்ஆனை** நெருங்குவதற்கான நமது முயற்சியானது, நம்மை நாமே மேம்படுத்திக்கொண்டு, நமது **இதயங்களைத்** தூய்மைப்படுத்தும் முயற்சிகளுடன் கைகோர்த்துச் செல்ல வேண்டும். அப்போதுதான், **"கலாமுல்லாஹ்"** வாகிய அல்லாஹ்வின் வார்த்தைகள் நமது வாழ்க்கையை ஒளிரச் செய்து, நமது குணத்தை அழகுபடுத்தும் ஒரு மின் விளக்காகத் தொடர்ந்து விளங்கும்.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!**

நமது பலவீனங்களை நாம் உணர்ந்துகொள்ளவும், அதே சமயம், அல்லாஹ் நமக்கு அருளியுள்ள நன்மைகளுக்கான ஆற்றலை அறிந்துகொள்ளவும் **திருக்குர்ஆன்** நம்மை அழைக்கிறது. நம்மை மேம்படுத்திக்கொள்ளவும் நமது குணநலன்களை அழகுபடுத்தவும் நாம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு வழிகாட்டும் **திருக்குர்ஆனின்** நான்கு நினைவூட்டல்களைப் பற்றி இங்கு நாம் சிந்திப்போம்:

**முதலாவதாக: பணிவாக இருப்பது**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, மனிதன் தன்னைத் தானே போதுமானவன்; தேவையற்றவன் என்று கருதும் இயல்புடையவனாக இருக்கின்றான் எனத் திருக்குர்ஆனின் "அல்-அலக்" எனும் அத்தியாயத்தின் 6-7 வரையிலான வசனங்களில் பின்வருமாறு விவரிக்கின்றான். *"எனினும், நிச்சயமாக மனிதன் வரம்பு மீறுகிறான், ஏனெனில், அவன் தன்னை [இறைவனிடமிருந்து] தேவையற்றவன் என்று கருதுகிறான்".*

மேலும், மனிதனின் தர்க்கம் செய்யும் இயல்பைப் பற்றித் திருக்குர்ஆனின் "அல்-கஹ்ஃப்" எனும் அத்தியாயத்தின் 54-வது வசனத்தில் பின்வருமாறு அல்லாஹ் விவரிக்கின்றான்: *"மேலும், மனிதன் அதிகமாகத் தர்க்கம் செய்பவனாகவே இருக்கின்றான்."*

சகோதரர்களே! **திருக்குர்ஆனின்** வழிகாட்டுதலானது, நமது பழக்க வழக்கங்கள் அல்லது விருப்பங்களுக்கு மாற்றமாக இருந்தாலும் கூட, திருக்குர்ஆனின் திருத்தங்களை ஏற்றுக்கொண்டு, நம்மைத் திருத்திக்கொள்ளத் தயாராகவும், திறந்த **மனதுடனும்** அதை நாம் அணுக வேண்டும்.

**இரண்டாவதாக: நமக்கு நாமே பொறுமையைக் கொண்டு பயிற்றுவிப்பது**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அல்-இஸ்ரா" எனும் அத்தியாயத்தின் 11-வது வசனத்தில், மனிதனை அவசரக்காரன் எனப் பின்வருமாறு வர்ணிக்கின்றான்: *"மனிதன் அவசரக்காரனாக இருக்கின்றான்"*

மேலும், திருக்குர்ஆனின் "அல்-மஆரிஜ்" எனும் அத்தியாயத்தின் 19-21 வரையிலான வசனங்களில் கஷ்டம் மனிதனைச் சூழ்ந்து கொள்ளும் போது, அவன் பொறுமையை இழந்துவிடுகிறான் எனவும் அல்லாஹ் கூறுகின்றான்: *"நிச்சயமாக, மனிதன் அவசரக்காரனாக, கவலைப்படுபவனாகப் படைக்கப்பட்டுள்ளான்; அவனுக்குத் துன்பம் நேரிடும் போது, அவன் பொறுமையை இழந்து விடுகிறான்"*

அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே! **திருக்குர்ஆனை** உள்வாங்கி, செயல்படுத்துவதற்குப் பொறுமை தேவை. அதன் பொருளைப் புரிந்துகொள்ளவும், அதன் படிப்பினைகளைச் சிந்திக்கவும் நேரம் எடுத்துக்கொண்டு, படிப்படியாக அவற்றை நாம் பின்பற்ற வேண்டும்.

**மூன்றாவதாக: நன்றியுணர்வை வளர்த்தல்**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, மனிதனின் நன்றிகெட்ட தன்மையைப் பற்றி திருக்குர்ஆனின் "அல்-ஆதியாதி" எனும் அத்தியாயத்தின் 6-வது வசனத்தில் பின்வருமாறு கூறுகின்றான்: *"நிச்சயமாக மனிதன் தன் இறைவனுக்கு நன்றிகெட்டவனாக இருக்கிறான்",*

மேலும், மனிதன் தனது செல்வத்தை அளவு கடந்து நேசிக்கின்றான் எனத் திருக்குர்ஆனின் "அல்-ஃபஜ்ர்" எனும் அத்தியாயத்தின் 20-வது வசனத்தில் அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்: *"[மனிதர்களே!] நீங்கள் செல்வத்தை அளவு கடந்து அன்புடன் நேசிக்கின்றீர்கள்"*

அன்பிற்குரிய சகோதரர்களே! **திருக்குர்ஆனின்** போதனைகளை உள்வாங்கி, செயல்படுத்துவதன் மூலம், அதன் வழிகாட்டுதல் எனும் அருட்கொடைக்கு நன்றி செலுத்துங்கள்; மேலும், வேலைப்பளுவும் உலக ஆசைகளும் அதிலிருந்து நம்மைத் திசை திருப்பி விட அனுமதிக்காதீர்கள்.

**நான்காவதாக: நமது குணங்களை அழகுபடுத்துதல்**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அல்-இஸ்ரா" எனும் அத்தியாயத்தின் 100-வது வசனத்தில் மனிதனின் கஞ்சத்தனத்தைப் பற்றி பின்வருமாறு விவரிக்கின்றான்: *"[நபியே!] நீர் கூறுவீராக! 'என் இறைவனின்*

*ரஹ்மத் எனும் அருள் பொக்கிஷங்களை நீங்கள் சொந்தமாக்கிக் கொண்டு இருப்பீர்களானாலும், அவை செலவாகி விடுமோ என்ற பயத்தினால் நீங்கள் அவற்றை [தனக்கோ அல்லது அல்லாஹ்வின் பாதையிலோ செலவு செய்யாமல்] தடுத்துக் கொள்வீர்கள் போல் தெரிகிறது; மேலும், மனிதன் கஞ்சனாகவே இருக்கின்றான்"*

சகோதரர்களே! நமது குணநலன்களை அழகுபடுத்துவதற்கு **திருக்குர்ஆன்** வழிகாட்டியாக இருக்கட்டுமாக!. **திருக்குர்ஆன்** ஓதப்பட வேண்டும்; அதன் கருத்துக்கள் புரிந்து கொள்ளப்படு, சக மனிதர்களிடம் அக்கறை கொள்பவர்களாகவும், தாராள மனப்பான்மை மற்றும் கருணைச் சிந்தனையுடையவர்களாகவும் அவை நம்மை  மாற்ற வேண்டும்.

**அன்பான ஜமாஅத்தார்களே!**
நமது பலவீனங்கள் எதுவாக இருந்தாலும், **"கலாமுல்லாஹ்"** வாகிய **திருக்குர்ஆனிடம்** நாம் நெருங்கிச் சென்று, அதன் போதனைகளால் நம்மை மேம்படுத்திக் கொள்வோமாக!. **திருக்குர்ஆன்** நமது **இதயங்களை** ஒளிரச் செய்து,  நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் நமக்கு வழிகாட்டி, நமது குணநலன்களை அழகுபடுத்தும் ஒளியாக ஆகட்டுமாக! ஆமீன், யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

<u>இரண்டாவது பிரசங்கம்</u>

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَالَ فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا اْلمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ

عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.